செ.வெ.எண்.397/2017 நாள்: 11.08.2017

**பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவினையொட்டி பள்ளி மாணவ-மாணவிகளுக்கிடையில் நடைபெறும் சிறப்பு பட்டிமன்றத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் தொடங்கி வைக்கிறார்.**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா வரும் 30.08.2015 அன்று வண்டலூர், கிளாம்பாக்கம், புதிய புறநகர் பேருந்து நிலைய முனையத்தில் பிரமாண்டமாக நடைபெறவுள்ளது. அதனையொட்டி மாவட்டம் முழுவதும் கலை-இலக்கிய போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள், கலாச்சார நிகழ்வுகள், பட்டிமன்றம் மற்றும் சிறப்பு முகாம்கள் நடைபெற்று வருகிறது.

அதன்படி தமிழ் வளர்ச்சித் துறை மூலம் பள்ளி மாணவ-மாணவிகளுக்கான சிறப்பு பட்டிமன்றம் நாளைய தினம் (12.08.2017) காலை 11.00 மணியளவில் காஞ்சிபுரம் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப அவர்கள் தொடங்கி வைக்கிறார். அப்பட்டிமன்றம் **நடுவர் முனைவர்.வே.அருட்மாமணி** தலைமையில் **"பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் மிகவும் நேசித்தது அரசியல் துறையையே! திரைப்படத் துரையையே"** என்ற தலைப்பில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பள்ளி மாணவ-மாணவிகள், பொதுமக்கள் பங்கேற்று சிறப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

செய்தி வெளியிடுபவர்

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**காஞ்சிபுரம்**